# ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி , திருவள்ளூர் மாவட்டம்

## மாதிரி வினாத்தாள் 2ம் பருவம்

பாடம் : தமிழ் வகுப்பு : 8

கேள்விகள் கற்றல் விளைவு 2

1. <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக</u>

1. ___________அணிகலன் தேவையில்லை.

அ. கல்லாதவர்க்கு, ஆ.அறிவுடையர்க்கு, இ. கற்றவர்க்கு. ஈ. அறமுடையவர்க்கு

2. கல்லாதவரே ___________ இல்லாதவர்.

அ. கல்வி. ஆ. கண். இ. எழுத்து. ஈ.சொல்

3. கற்க வேண்டிய பருவம் ___________

அ. இளமை, ஆ.முதுமை, இ. நேர்மை, ஈ.வாய்மை

4. கல்விக்கு ___________ இல்லை.

அ. கரை, ஆ.அணை, இ. ஏரி, ஈ.குளம்.

5. நீதி நெறி விளக்கப்பாடலை எழுதியவர் ___________

அ. ஔவையார், ஆ.இளங்கோவடிகள், இ. குமரகுருபரர், ஈ.திருத்தக்கதேவர்

6. ___________காட்டாமல் வாழ வேண்டும்.

அ. திறமையை, ஆ.அறிவை, இ. அகம்பாவத்தை

7. மன்னிக்க தெரிந்த மனிதனின் உள்ளம் ___________ கல் போன்றது.

அ. மாணிக்கம், ஆ. வைரம், இ. தங்கம், ஈ.பவளம்.

8. ___________ தீட்டாதே ___________ தீட்டு.

அ. கத்தியை, புத்தியை, ஆ.அறி வை, அறத்தை, இ. சித்தத்தை, மந்தத்தை,

9. கற்க ___________ கற்பவை.......

அ. ற்றக, ஆ.தக, இ. கற்ற, ஈ.கசடற.

10. __________வேலை கொடுத்து அமைதிகாக்க வேண்டும்.

அ. அறிவுக்கு, ஆ. அறத்திற்கு, இ. கல்விக்கு, ஈ. ஒழுக்கத்திற்கு

11. கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று என்று கூறியவர் . __________

அ. இந்திராகாந்தி, ஆ.கிரண்பேடி, இ. விஜயலட்சுமி பண்டிட், ஈ. சரோஜினி நாயுடு

12. பின்வருபவர்களின் சங்கப் புலவர் அல்லாதவர் __________

அ. இளங்கோவடிகள், ஆ.கம்பர், இ. திரு.வி.கல்யாணசுந்தரனார், ஈ.சேக்கிழார்

13. கேடில் விழுச் செல்வம் கல்வி இச்செய்யுளில் கேடில் என்னும் சொல்லின் பொருள் __________

அ. அழியக் கூடிய ஆ.சிறந்த, இ.அழிவில்லாத, ஈ.பண்பில்லாத

14.பின்வருவனவற்றுள் எது இரட்டைக் காப்பியம் __________

அ. இராமாயணம், மகாபாரதம், ஆ. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, இ.சிலப்பதிகாரம், மணிமேகலை, ஈ.தேவாரம், திருவாசகம்

15.மனிதன் விலங்கலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது __________

அ. பொருள், ஆ. பதவி, இ.கல்வி, ஈ.பண்பு

16.ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் **உயர்த்து**வதில் கல்வி பெரும்பகுதி வகிக்கிறது. இதில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச் சொல்லை வட்டமிடுக.

அ. இறக்கு, ஆ. தாழ்த்து இ. அழைத்து, ஈ.ஏற்று

17.நான் ஒரு சிற்றூர்ப் பள்ளியின் தலைமையாசிரியர் இதில் அடிக்கோடிட்ட சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ. சிறு + ஊர் ஆ. சிறுமை + ஊர் இ.சிறிய + ஊர். ஈ.சீர் + ஊர்

18."அன்புடைமை" இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

அ. அன் + புடைமை, ஆ. அன்பு + டைமை, இ.அன்பு + உடைமை, ஈ.அன்மை + உடைமை

19. "ஆன்ற குடிப்பிறத்தல்" இதில் 'ஆன்ற' என்பதன் பொருள் __________

அ. இகழ்ந்த, ஆ. உயர்ந்த, இ. சிறந்த, ஈ.புகழ்ந்த.

20.திருக்குறள் __________ நூல்களுள் ஒன்று.

அ. எட்டுத்தொகை, ஆ.பத்துப்பாட்டு, இ.பதினென்கீழ்க்கணக்கு, ஈ.சிற்றிலக்கியம்.

21.பெயர் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ___________ ஆகும்.

அ. எழுவாய், ஆ.செயப்படு பொருள், இ. பயனிலை ஈ. வேற்றுமை.

22.உடனிகழ்ச்சிப் பொருளில் ___________ வேற்றுமை வரும்.

அ. மூன்றாம், ஆ. நான்காம், இ. ஐந்தாம், ஈ.ஆறாம்

23.'மலர், பானையை வனைந்தாள்'. இத்தொடர் ___________ பொருளைக் குறிக்கிறது.

அ. ஆக்கல், ஆ.அழித்தல், இ.கொடை, ஈ.அடைதல்.

24.படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயரால் மாற்றி அழைப்பதை ___________ என்கிறோம்.

அ. எட்டாம் வேற்றுமை, ஆ. ஏழாம் வேற்றுமை, இ. ஆறாம் வேற்றுமை, ஈ.ஐந்தாம் வேற்றுமை.

25.இரண்டாம் வேற்றுமைக்கு உரிய உருபு ___________

அ.ஆல், ஆ. ஐ, இ. கு, ஈ.அது

26.காட்டிலிருந்து வந்து ___________ கரும்பைத் தின்றன

அ. முகில்கள், ஆ. முழவுகள், இ. வேழங்கள், ஈ.வேய்கள்.

27.'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ___________

அ. கனகச் + சுனை, ஆ.கனக + சுனை, இ.கனகம் + சுனை, ஈ.கனம் + சுனை

28.தமிழ் + இசை என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________

அ. தமிழ்இசை, ஆ.தமிழிசை, இ.தமியிசை ஈ.தமிழிஇசை

29.பதிகம் என்பது ___________ பாடல்களைக் கொண்டது

அ. 7, ஆ. 8, இ. 9, ஈ. 10

30.தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படுபவர் ___________

அ. திருஞானசம்பந்தர், ஆ.திருநாவுக்கரசர், இ.சுந்தரர், ஈ.மாணிக்கவாசகர்.

31. பசியால் வாடும் ___________ உணவளித்தல் நமது கடமை.

அ. பிரிந்தவர்க்கு, ஆ.அலந்தவர்க்கு, இ. சிறந்தவர்க்கு, ஈ. உயர்ந்தவர்க்கு

32.நம்மை ___________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அ. இகழ்வாரை, ஆ.அகழ்வாரை, இ.புகழ்வாரை, ஈ.மகிழ்வாரை

33.சான்றோம் காட்டிய வழியில் நடத்தல் என்பது.

அ. பண்பு, ஆ. அன்பு, இ. இயல்பு, ஈ.பொறை

34.முன்சொன்ன வாக்கைக் காப்பாற்றுவது என்பது.

அ. செறிவு ஆ.அறிவு, இ.உறவினர், ஈ.பகைவர்

35.குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழுங்குவது என்பது.

அ. நீதிமுறை, ஆ.மறவாமை, இ. வெறுக்காமை, ஈ. பண்புடைமை.

36.பானை செய்யப் பயன்படும் சக்கரத்தின் பெயர்.

அ. திருவை ஆ. டெரகோட்டா, இ. பனை ஓலை, ஈ. புறநானூறு.

37.பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை.

அ. கல்வெட்டுகள், ஆ. செப்பேடுகள், இ. பனை ஓலைகள், ஈ. மண்பாண்டங்கள்.

38.தமிழ்நாட்டில் மாநில மரம் ___________

அ. பனை, ஆ.தென்னை, இ. மா, ஈ.வேம்பு

39.பிரம்பு என்பதன் தாவரவியல் பெயர் ___________

அ. கலாமஸ் ரொடாங், ஆ.அந்தமான், இ. மலேசியா, ஈ. கலாமஸ்

40. கைவினைப் பொருட்கள் செய்வதற்கு ஏற்ற மூங்கில்

அ. கூட்டுமூங்கில், ஆ.கல் மூங்கில், இ. மலை மூங்கில், ஈ.புங்க மரம்.

41. விகாரப்புணர்ச்சி ___________ வகைப்படும்.

அ. ஐந்து, ஆ.நான்கு, இ. மூன்று, ஈ.இரண்டு

42.பாலாடை ___________ இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ___________ அ. இயல்பு, ஆ.தோன்றல். இ. திரிதல், ஈ.கெடுதல்

43.தமிழ்த்தாய் இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ___________

அ கெடுதல், ஆ. தோன்றல், இ. திரிதல், ஈ இயல்பு

44.நிலைமொழியும் வருமொழியும் இணையும் போது ஓர் எழுத்து வேறு எழுத்தாய் மாறுவது ___________ ஆகும்

அ. தோன்றல் விகாரம், ஆ. கெடுதல் விகாரம், இ. திரிதல் விகாரம், ஈ.இயல்பு புணர்ச்சி.

45. 'மரவேர்' இச் சொல்லுக்குரிய விகாரம் ___________

அ.இயல்பு புணர்ச்சி, ஆ. கெடுதல் விகாரம், இ. திரிதல் விகாரம், ஈ. தோன்றல் விகாரம்,

46.மக்களின் பசியைப் போக்கும் தொழில் ___________

அ. நெசவு, ஆ. உழவு, இ. ஆடைகள் தயாரித்தல், ஈ. வியாபாரம் செய்தல்

47.தமிழகத்தில் நெசவு தொழிலுக்கு புகழ் பெற்று விளங்கும் இடம் ___________

அ. காஞ்சிபுரம், ஆ. ஆரபுத்தூர், இ. தஸ்ரணி, ஈ. மாயவரம்.

48.உலக அளவில் பட்டின் தாயகமாக விளங்கும் நாடு ___________

அ இந்தியா, ஆ. சீனா, இ. அமெரிக்கா, ஈ. ஜப்பான்.

49. car ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக ___________

அ சரக்கு வாகனம், ஆ. சரக்குபேருந்து, இ. மகிழுந்து, ஈ. பேருந்து.

50.'காலம் உடன்வரும்' என்ற கதையில் வரும் தினேஷ் துணி ஆலையின் முதலாளியின் பெயர் ___________

அ ரகு, ஆ. ரங்கன், இ. சுப்பிரமணி, ஈ.மாயழகு.

51.நாட்டுப்புற பாடல் என்றால என்ன?

அ.எழுதி வைத்துப் பாடுவது, ஆ. பேசா இலக்கியம், இ. வாய் மொழி இலக்கியம், ஈ.இசையை படித்தவர்கள் பாடுவது

52.மன்பதையை காக்கும் மாபெரும் சிறப்பு யாருக்குண்டு ?

அ. மண்ணுலகம், ஆ. விண்ணுலகம், இ. பேரண்டம் ஈ. மழை.

53.யாணர் என்பதின் பொருள் யாது?

அ ஓசை, ஆ. அஞ்சி, இ. புதுவருவாய், ஈ.தங்கம்

54.தகடூர் என அழைக்கப்படும் ஊர் பெயர் என்ன ?

அ தர்மபுரி, ஆ.காரைக்கால், இ. மதுரை, ஈ.கோவை.

55.தோட்டத்தில் தம்பி ஊன்றிய__________ எல்லாம் முளைத்தன‡

அ. சத்துகள், ஆ. பித்துகள், இ. முத்துகள், ஈ. வித்துகள்

56.ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது?

அ.காடு, ஆ.வீடு, இ. மழை, ஈ. நாடு

57.கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் __________

அ. சிறுமழை, ஆ. பெருமழை, இ. மிகுந்தமழை, ஈ. எடை குறைந்த மழை

.

58.மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

அ அதிகமான வீடுகளை கட்டுவது, ஆ. மிகவும் அதிக எண்ணிக்கையிலான மரங்களை வளர்த்தல், இ. மரங்களை வெட்டுதல், ஈ. அதிகமான முள்செடிகளை வளர்த்தல்.

59.கொங்கு நாட்டு வழிபாடு என்னும் நூலின் ஆசிரியர் __________

அ ஔவையார், ஆ. சங்கப்புலவர், இ. பாரதிதாசன், ஈ. அ.கௌரன்

61.மூவேந்தர் என்பவர்கள் யாவர் ?__________

அ. மூன்று போர்கள், ஆ. சேரன், சோழர், பாண்டியர், இ. மூன்று ஊர்கள், ஈ. நான், நீ, அவன்

62.தொழில் செய்வது என்பது __________ அ வீட்டுவேலை செய்வது, ஆ. வெளியில் செல்வது, இ. உழைத்து வருவாய் பெறுவது, ஈ. வேடிக்கை பார்ப்பது.

63.திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது எதை பற்றியது?

அ.வணிகம் செய்வது, ஆ. சோம்பித்திரிவது, இ. கடலை சுற்றிப் பார்ப்பது, ஈ. கடலில் நீந்தி வருவது.

64. கோவன் புத்தூர் என்னும் சொல் எந்த ஊரைக் குறிப்பிடுகிறது?

அ காஞ்சிபுரம், ஆ. திருநெல்வேலி, இ. கொல்லிமலை, ஈ. கோயம்முத்தூர்